தினமணி

## மே 24-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 21 May 2012 03:29:29 PM IST

தூத்துக்குடி, மே 20: தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மே 24-ம் தேதி நடைபெறுகிறது. இதில் விவசாய சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. மே மாதத்துக்கான கூட்டம் 24-ம் தேதி பகல் 11 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் விவசாய சங்கத் தலைவர்கள், பாசன சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு பயன் பெறலாம் என்றார்.

## உழவர் பெருவிழா நிறைவு

First Published : 21 May 2012 11:21:14 AM IST

பழனி, மே 20: பழனி அருகே ஆண்டிபட்டியில் உழவர் பெருவிழா நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது.

பழனி ஒன்றியத் தலைவர் செல்லசாமி தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் காளியம்மாள், துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சிவசாமி, கால்நடைத்துறை மருத்துவர் கேசவன், பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் நடராஜ், வேளாண்மை உதவிப் பொறியாளர் லட்சுமணன், வேளாண்மை விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் பாண்டியன், மீன் வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் அழகர்சாமி உள்ளிட்ட பல்வேறு துறையினர் துறை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கினர்.

450 பயனாளிகளுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை, நிலக்கடலை விதைகள், விசைத்தெளிப்பான்களை ஒன்றியத் தலைவர் செல்லசாமி வழங்கினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் தொழில்நுட்பக் கையேடுகள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் சுந்தர்ராஜ், சின்னமாணிக்கம், முருகேசன், ஜாகீர்உசேன், தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பெரியசாமி, சுந்தர்ராஜ், கருப்புச்சாமி, முருகன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உற்பத்தி குறைவால் உருளை கிழங்கு விலை உயர்வு**

மே 22,2012,00:26



கோல்கட்டா:உற்பத்தி குறைந்துள்ளதால், உருளைக்கிழங்கு விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.கடந்து இரண்டு ஆண்டுகளாக, உருளைக்கிழங்கு உற்பத்தி அதிகரித்ததால், அதன் விலை குறைந்திருந்தது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், உருளைக்கிழங்கு பயிரிடுவதை குறைத்துக் கொண்டு, மாற்று பயிர்களுக்கு மாறினர். பருவ நிலை மேலும், மோசமான பருவ நிலை காரணமாகவும், உருளைக்கிழங்கின் உற்பத்தி குறைந்தது. மேற்குவங்கத்தில், உருளைக்கிழங்கு பயரிடும் பரப்பளவு, 4 லட்சம் ஹெக்டேரில் இருந்த, 3.75 ஹெக்டேராக குறைந்துள்ளது.

உருளைக்கிழங்கு உற்பத்தியில் உத்தரபிரதேசம் முதலிடத்தில் உள்ளது. இங்கு, ஆண்டுக்கு 1.30 கோடி டன் உருளை உற்பத்தியாகிறது. ஆனால், இம்மாநிலத்திலும், உருளைக்கிழங்கு உற்பத்தி, 20 சதவீதம் சரிவடைந்துள்ளது. இங்கு போதுமான உரங்கள், குறிப்பாக பொட்டாசியம் கிடைக்காததால், உருளைக்கிழங்கு உற்பத்தி குறைந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.அதே சமயம், அதற்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் உருளைக்கிழங்கின் விலை, கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.
இங்கு, ஒரு குவிண்டால் உருளைக்கிழங்கு 1,100 ரூபாய்க்கு விற்பனையாகிறது.ஒரு குவிண்டால், "ஜோதி' வகை உருளைக்கிழங்கின் விலை, ஐந்து மடங்கு உயர்ந்து, 200 ரூபாயில் இருந்து, 1,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது,சென்ற ஏப்ரலில், 800 ரூபாயாக இருந்தது.குளிர்பதன மையங்கள்:மேற்குவங்கத்தில், உருளைக்கிழங்கு விலை உயர்வை கட்டுப்படுத்த, குளிர்பதன மையங்களில் வைக்கப்பட்டுள்ள உருளைக்கிழங்கு வகைகளை வெளிச்சந்தைக்கு அனுப்பும் பணி துவங்கியுள்ளது.
இம்மையங்களில் வைக்கப்பட்டுள்ள உருளைக்கிழங்கு வகைகளில், 405 சதவீதம் வெளிச்சந்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.மேற்குவங்கத்தில் மொத்தம் 403 குளிர்பதன கிடங்குகள் உள்ளன. இவற்றில், 58 லட்சம் டன் உருளைக்கிழங்கு வகைகளை சேமித்து வைக்க முடியும். எனினும், உற்பத்தி குறைந்துள்ளதால், உருளைக்கிழங்குகளை இந்த குளிர் பதன கிடங்குகளில் வைப்பது, 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை குறைந்துள்ளது.

## வரும் 2012-13ம் வேளாண் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி இலக்கு 25 கோடி டன்

மே 22,2012,00:24



புதுடில்லி:வரும் 2012-13ம் வேளாண் பருவத்தில் (ஜூலை-ஜூன்), மத்திய அரசு, 25 கோடி டன் உணவு தானியங்களை, உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. வரும் பருவத்தில், நாடு தழுவிய அளவில், பருவ மழை நன்கு இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அண்மையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, தென்மேற்கு பருவ மழை, முன்கூட்டியே தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.வேளாண் அமைச்சகம் எனவே, நாடு தழுவிய அளவில், நடப்பு வேளாண் பருவத்தை போன்றே, வரும் ஆண்டிலும், நாட்டின் தானிய உற்பத்தி, சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் தான், வரும் பருவத்தில், 25 கோடி டன் தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச் சகத்தின் செயலர் பி.கே.பாசு தெரிவித்துள்ளார்.நடப்பு வேளாண் பருவத்தில், 24.50 கோடி டன், தானியங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில், சாதகமான பருவ நிலையால், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட, கூடுதலாக, 70 லட்சம் டன் உற்பத்தியாகி, 25.20 கோடி டன்னாக உயந்துள்ளது.

நடப்பு பருவத்தில், 10.40 கோடி டன், நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதன் உற்பத்தி, 10.34 கோடி டன்னாக உள்ளது. அதேசமயம், நடப்பு பருவத்தில், 9.02 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.ஆனால், இதன் உற்பத்தி, 8.60 கோடி டன்னாக சற்று குறைந்துள்ளது. இருப்பினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக, கோதுமை உற்பத்தி, மிகவும் அதிகரித்ததால், இதை சேமித்து வைப்பதற்கு, போதிய கிடங்கு வசதி இல்லாமல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் வித்துக்கள்:வரும் வேளாண் பருவத்தில், 1.80 கோடி டன் பருப்பு வகைகள், உற்பத்தி செய்யவும், 3.30 கோடி டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதேசமயம், வேளாண் அமைச்சகத்தின் மதிப்பீட்டின் படி, 2 கோடி டன் அளவிற்கு, பருப்பு வகைகள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டில், பருப்பு வகைகளுக்கான தேவை, 2.10 கோடி டன் என்றளவில் உள்ளது. தேவையை விட, உற்பத்தி குறைவாக உள்ளதால், பல நாடுகளிலிருந்து, 30 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படுகிறது.

இறக்குமதி:இதன் இறக்குமதியை குறைக்கும் வகையில், மத்திய அரசு, உள்நாட்டில், இதன் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, மத்திய அரசின் உயரதிகாரி தெரிவித்தார்.நடப்பு 2011-12ம் வேளாண் பருவத்தில், 1.70 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தியாகும் என, மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதன் உற்பத்தி, 1.82 கோடி டன்னாக சற்று அதிகரித்துள்ளது. அதேசமயம், சென்ற வேளாண் பருவத்தில், 3.36 கோடி டன் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதன் உற்பத்தி,

3 கோடி டன் அளவிற்கே இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கோடை சாகுபடி:நடப்பு வேளாண் பருவத்தில், பருப்பு வகைகள் உற்பத்தி, இலக்கை விட, மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. ஏனெனில், பல மாநிலங்களில், கோடை சாகுபடியில் பருப்பு வகைகள், அறுவடைக்கு தயாராக உள்ளன.

குறிப்பாக, பாசி பயறு, அறுவடையாகி சந்தைக்கு வரும் நிலையில், ஒட்டுமொத்த பருப்பு வகைகள் உற்பத்தி, மேலும் உயர வாய்ப்புள்ளது என, வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.பருவமழை நன்கு இருக்கும் நிலையில், நடப்பு பருவத்தை விட, வரும் வேளாண் பருவத்தில், நாட்டின் தானிய உற்பத்தி, சிறப்பான அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது என, வேளான் அமைச்சகத்தின் மூத்த அதிகாரி மேலும் கூறினார்.

கோதுமை ஏற்றுமதி செய்ய பரிந்துரை:கடந்த இரண்டு ஆண்டுகளாக, கோதுமை உற்பத்தி, மிகவும் அதிகரித்துள்ளது. எனவே, இதை சேமித்து வைப்பதற்கு, போதிய இட வசதி இல்லாமல் உள்ளது. இந்நிலையில், பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் தலைமையில், அமைக்கப்பட்ட குழு, 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்யலாம் என மத்திய அரசுக்கு, பரிந்துரை செய்துள்ளது.இதுதவிர, கூடுதலாக, 1.30 கோடி டன் கோதுமையை பொது விநியோக திட்டம் மற்றும் பொது சந்தையில் விற்கவும் ஆலோசனை வழங்கியுள்ளது. இக்குழுவின் பரிந்துரை குறித்து, கூடிய விரைவில் முடிவு எடுக்கப்படும் என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ், ராஜ்யசபாவில் தெரிவித்தார்.

**நாமக்கல்லில் கூடுதலாக 73 லட்சம் முட்டை உற்பத்தி**

மே 22,2012,00:12



நாமக்கல்:நாமக்கல் மண்டலத்தில் உள்ள கோழிப்பண்ணைகளில், கடந்த ஓர் ஆண்டில் மட்டும், கூடுதலாக 73 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.இங்கு கோழிப்பண்ணைகளை சார்ந்து தீவனம் தயார் செய்தல், முட்டைகளை வைப்பதற்கான அட்டைகளை தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு துணைத் தொழில்களும் நடைபெற்று வருகின்றன.இங்குள்ள பண்ணையாளர்கள், கடந்த பத்தாண்டில் இத்தொழிலை பல மடங்கு விரிவுபடுத்தியுள்ளனர். அதன் பலனாக முட்டை உற்பத்தி சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.அந்த வகையில், கடந்த பத்தாண்டில் முட்டை உற்பத்தி நிலவரம் குறித்த பட்டியலை, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்

குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 2001-02ம் நிதியாண்டு சராசரியாக, ஒரு கோடியே 14 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன.கடந்த, 2009-10ல், 2 கோடியே 20 லட்சம் முட்டைகளும், 2010-11ல், 2 கோடியே 41 லட்சம் முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2011-12ம் நிதியாண்டில், 3 கோடியே 13 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.இதுகுறித்து, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தலைவர் (நாமக்கல் மண்டலம்)செல்வராஜ் கூறியதாவது:பண்ணைகளின் விரிவாக்க நடவடிக்கைகளாலும், புதிய பண்ணைகள் உருவாகியுள்ளதாலும், முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 1,000 கோழிப்பண்ணைகள் உள்ளன. இவ்வாறு செல்வராஜ் கூறினார்.

## உழவர் பெருவிழா நிறைவு

பதிவு செய்த நாள் : மே 22,2012,04:01 IST

தியாகதுருகம்:தியாகதுருகம் ஒன்றியம் வேளாக்குறிச்சியில் உழவர் பெருவிழா நிறைவு விழா நடந்தது.தியாகதுருகம் ஒன்றியத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் திருவிழா கடந்த தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் மாதம் 13ம் தேதி துவங்கியது.
பி.டி.ஓ., அலுவலகத்தில் நடந்த விழாவில் அரசு கொறடா மோகன், கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ., அழகுவேல்பாபு துவக்கி வைத்தனர்.
அதைத்தொடர்ந்து ஒன்றியத்தில் உள்ள 50 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா நடத்தப்பட்டது.
வேளாக்குறிச்சி ஊராட்சியில் நிறைவு விழா நடந்தது. ஒன்றிய சேர்மன் பச்சையம்மாள் வைத்திலிங்கம் தலைமை தாங்கினார்.
மாவட்ட கவுன்சிலர்கள் அய்யப்பா, ராமன், ஊராட்சி தலைவர் கலியன் முன்னிலை வகித்தனர்.

வேளாண் உதவி இயக்குனர் ராமச்சந்திரன் வரவேற்றார். பயிர் சாகுபடியில் மகசூலை பெருக்குவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.விழாவில் கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், ஜானிபாஷா, உதவி வேளாண்மை அலுவலர்கள் ரவிக்குமார், தண்டபாணி, சிவக்குமார், பழனிவேல், பழனிசாமி, தங்கதுரை, தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமர், செந்தில், மணி, கார்த்திக் பங்கேற்றனர்.

## ஆடு, மாடு வழங்கும் விழா

பதிவு செய்த நாள் : மே 22,2012,03:59 IST

கருத்தை பதிவு செய்ய

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் அருகே உள்ள ஏர்வாய்பட்டினம் கிராமத்தில் பயனாளிகளுக்கு ஆடு, மாடு வழங்கப்பட்டது.கச்சிராயபாளையம் அடுத்த ஏர்வாய்பட்டினம் ஊராட்சியில் இலவச ஆடு, மாடு வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் அய்யாவு தலைமை தாங்கினார்.அரசு கொறடா மோகன்,பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கள்ளக்குறிச்சி சேர்மன் ராஜசேகர், சங்கராபுரம் ஒன்றிய சேர்மன் அரசு, கால்நடை டாக்டர் ராஜேந்திரன், துணைத் தலைவர் கற்பகம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.டாக்டர் சுகுமார் நன்றி கூறினார்.

## சொட்டு நீர் பாசனத்துக்கு ரூ.2.19 லட்சம் மானியம்

பதிவு செய்த நாள் : மே 22,2012,01:55 IST

கருத்தை பதிவு செய்ய

மோகனூர்: ""உழவர் பெருவிழாவில், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஆறு பேருக்கு, 2.19 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமங்களிலும், ஏப்ரல் 13ம் தேதி முதல் மே 17ம் தேதி வரை உழவர் பெருவிழா கொண்டாட, தமிழக முதல்வர் உத்தரவிட்டார். அதன்படி, நாமக்கல் மாவட்டம், மோகனூர் யூனியனுக்கு உட்பட்ட, 21 வருவாய் கிராமங்களில், உழவர் பெருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

அவ்விழாவில், ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடல் புழு நீக்கம், சினை ஊசி போடப்பட்டது. மேலும், கருத்து கண்காட்சி, செயல் விளக்கங்கள், கருத்தரங்கம், இடுபொருட்கள் வினியோகம், திட்ட பயனாளிகள் முன்பதிவு, கால்நடை மருத்துவ முகாம், பார்த்தீனியம் அழிப்பு, விவசாயிகளின் வெற்றி கதைகள், தெரு நாடகப்பாடல்கள், படக்காட்சிகள் முகாமில் காண்பிக்கப்பட்டது.வேளாண், தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு, வேளாண் அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர்கள், பால் வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த

அலுவலர்கள் பங்கேற்று, விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்களை எடுத்துக்கூறினர். ஒரு மாதமாக நடந்த முகாமில், 21 வருவாய் கிராமங்களில் இருந்தும், 7,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர். மேலும், 450 விவசாயிகளின் தோட்டத்தில் மண் மாதிரி சோதனை நடத்தப்பட்டு, 380 பேருக்கு ஃபோட்டோ ஒட்டிய அட்டையும், 947 பேருக்கு உழவர் கையேடும், தோட்டக்கலை துறை சார்பில் மூன்று பேருக்கு, ஒரு லட்சத்துக்கு 34 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

முகாமில், ஒரு லட்சம் மதிப்பில், ஐந்து பேருக்கு உரமும், எட்டு கிலோ விதை 12 பேருக்கும், ஆறு பேருக்கு பைப் லைன் அமைக்க, 90 ஆயிரம் ரூபாய், கடந்த ஆண்டு திட்டத்தின், 100 சதவீதம் மானியத்தில் ஆறு பேருக்கு சொட்டு நீர் குழாய் அமைக்க இரண்டு லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் : மே 22,2012,01:49 IST

நாமக்கல்: "நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், வரும் 25ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது' என, கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், வரும் 25ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. கூட்டத்தில், விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகள் குறித்து தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாழையில் ஊடுபயிராக கத்திரி சாகுபடி ஒரு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் லாபம்

பதிவு செய்த நாள் : மே 22,2012,01:39 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் வாழையில் ஊடுபயிராக கத்திரி சாகுபடி செய்வது அதிகரித்துள்ளது. ஊடுபயிர் மூலம் ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது.

நெல், கரும்பு மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களின் உற்பத்திக்கு பெயர் போன கோபி பகுதியில், ஐந்து ஆண்டுகளாக மாற்றுப்பயிர்களை விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர். உரம் விலை

பல மடங்கு உயர்வு, விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் நெல் சாகுபடியும், சரியான விலை கிடைக்காததாலும், குறித்த காலத்தில் கரும்பு வெட்டாததால் கரும்பு சாகுபடியும், நிரந்தர விலை இல்லாததால் மஞ்சள் சாகுபடியும் ஆண்டுக்கு ஆண்டுக்கு குறைந்து வருகிறது.

இதனால், குறுகிய காலத்தில் அதிக லாபம் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை கோபி விவசாயிகள் பயிரிடத் துவங்கியுள்ளனர். குறிப்பாக, கத்திரிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய், புடலை, மக்காச்சோளம், சேனை கிழங்கு, சாம்பாரில் பயன்படுத்தப்படும் வெள்ளை பூசணி, பொரியலில் பயன்படுத்தப்படும் சர்க்கரை பூசணி ஆகியவை அதிகம் பயிராகிறது.கோபி, கொளப்பலூர், கடத்தூர், சிறுவலூர் உள்ளிட்ட பகுதிகளில் வாழையில் ஊடுபயிராக கத்திரிக்காய் சாகுபடி செய்துள்ளனர். 90 முதல் 120 நாட்களில் அறுவடைக்கு வரும் கத்திரி, பயிரிடுவதன் மூலம் இரண்டு முதல் ஐந்து டன் வரை கத்தரி கிடைக்கும். 25 ஆயிரம் முதல், 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

விவசாயி ஒருவர் கூறியதாவது:பனிக்காலத்தில் கத்திரி செடியில் பூக்கள் அழுகி விடும்; உற்பத்தி குறைவாக இருக்கும். வாழையில் கத்திரி ஊடுபயிராக பயிரிட்டுள்ளதால், கோடை வெயிலிலும் சீராக பூ பூப்பதால் விளைச்சல் நன்றாக உள்ளது. திருமண சீஸன் காரணமாக கத்திரிக்காய் விற்பனை சூடுபிடித்துள்ளது. தற்போது, கிலோ, 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு ஏக்கர் வாழையில் ஊடுபயிராக கத்தரி பயிரிட்டால், இரண்டு முதல் ஐந்து டன் கத்திரி விளைச்சலாகும். செலவு போக, 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. அனைத்து வகையான பயிர்களிலும் ஏதேனும் ஒரு வகையாக தோட்டக்கலை பயிர் ஊடுபயிர் செய்வது அதிகரித்துள்ளது. ஊடுபயிர் மூலம் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட லாபம் கிடைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் விளைபொருள் விற்பனை

பதிவு செய்த நாள் : மே 22,2012,00:35 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நான்கு லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வேளாண் விளைபொருட்கள் விற்பனை நடந்துள்ளது.

பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமைகளில்

பருத்தி மற்றும் மக்காசோளம் விளைப்பொருட்கள் வரப்பெற்று விற்றுத்தரப்படுகிறது. அதன்படி கடந்த 18ம் தேதியன்று 410 மூட்டை பருத்தி வரப்பெற்று நான்கு லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுத்தரப்பட்டது. பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகப்பட்சமாக ரூ.3,945க்கு விற்பனையானது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி, மக்காசோளம் விளைப்பொருட்களை விற்று விவசாயிகள் பயன் பெறலாம் என கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் திறன் மேம்பாட்டு பயிற்சி

பதிவு செய்த நாள் : மே 22,2012,00:33 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் பெரம்பலூர் வட்டார அளவிலான விவசாயிகள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெரம்பலூரில் நடந்தது.

பயிற்சினை தொடங்கி வைத்து கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது: கிடைக்கும் நீரை திறமையாக பயன்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தியை பெருக்க தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் சின்னாறு உபவடி நிலப்பகுதியில் பெரம்பலூர், வேப்பூர் மற்றும் வேப்பந்தட்டை வட்டாரத்திலும், சுவேத உபவடி நில பகுதி

வேப்பந்தட்டை வட்டாரத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் லாடபுரம் பெரிய ஏரி, சிறிய ஏரி, களரம்பட்டி ஏரி, மேலபுலியூர் ஏரி, குரும்பலூர் ஏரி, செஞ்சேரி ஏரி, பெரம்பலூர் மேல், கீழ் ஏரி, அரணாரை ஏரி, செங்குணம் ஏரி, துறைமங்கலம் ஏரி, எசனை ஏரி, மதவாணை அம்மன் ஏரி ஆகிய் 13 ஏரிகளின் பாசன பகுதிகளில், பாசன அமைப்புகளை நவீனபடுத்துதல், பாசன வேளாண்மைக்கான பயனீட்டாளர் சங்கம் அமைத்தல், வேளாண்மையை தீவிரப்படுத்துதல் மற்றும் துணை தொழில்களை ஊக்குவிதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் கலெக்டர் தரேஷ்அஹமது 25 விவசாயிகளுக்கு தலா ரூ.24,940 மதிப்பிலான மழைத் தெளிப்பான், 25 விவசாயிகளுக்கு தலா ரூ.16,990 மதிப்பிலான நடமாடும் தெளிப்புநீர் பாசனக்கருவிகளையும் மொத்தம் 10 லட்சத்து 49 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பிலான விவசாய கருவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ., தமிழ்ச்செல்வன், யூனியன் சேர்மன்கள் மருதை, கிருஷ்ணகுமார், வேளாண் உதவி இயக்குநர் செந்தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## இயற்கை ஆராய்ச்சி மையத்தில் மாநில விவசாய கருத்தரங்கம் : மே 27ம் தேதி துவக்கம்

பதிவு செய்த நாள் : மே 22,2012,00:23 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் இயற்கை விவசாய ஆராய்ச்சி மையத்தில் வருகிற 27ம் தேதி மாநில அளவிலான விவசாய கருத்தரங்கம் நடக்கின்றது. இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமை வகிக்கிறார். திருவாரூர் கலெக்டர் நடராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல மேலாளர் அஞ்சனா வீரராகவன், திருவாரூர் நபார்டு வங்கி பொது மேலாளர் ரவிசங்கர் கேரளா முன்னாள் அமைச்சர் ரத்தனாகர் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

இயற்கை விவசாயம் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. மூவாயிரம் விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகள் தலா இரண்டு கிலோ வழங்கப்படுகிறது. விழாவில் பாரம்பரிய விதைகள் இடம் பெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை ஆதிரெங்கம் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையம் கிரியேட் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் சார்பில், கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன், விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

மாநில அளவில் உள்ள விவசாயிகள் இதில் பங்கேற்கின்றனர்.

## பயிர்காப்பீடு கட்டாயப்பிடித்தம் விவசாயிகள் மத்தியில் அதிருப்தி

பதிவு செய்த நாள் : மே 22,2012,03:45 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் பயிர்காப்பீடு திட்டத்தின் கீழ் கட்டாயமாக பிரிமியம் பிடித்தம் செய்யப்படுவதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.பயிர் காப்பீடு திட்டத்தினை விரும்பும் விவசாயிகளுக்கு மட்டும் பிரிமியம் தொகை பிடித்தம் செய்ய வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகமும் இதனை அறிவுறுத்தி வருகிறது. ஆனால் மத்திய கூட்டுறவு வங்கியின் அறிவுறுத்தல்படி தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் பெறும் அனைவருக்கும் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பிரிமியம் பிடித்தம் செய்யப்படுகிறது.விவசாயிகள் மறுத்தாலும், கூட்டுறவு ஊழியர்கள் கட்டாய பிடித்தம் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் தங்களுக்கு பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டு வருவதாக கூறி அதிருப்தியில் உள்ளனர்.மாவட்ட நிர்வாகத்திடம் மீண்டும் முறையீடு

செய்து, விவசாயிகள், மத்திய கூட்டுறவு வங்கி அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அதிகாரிகளை கொண்ட முத்தரப்பு கூட்டம் நடத்தி முடிவு செய்ய வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

## அரசு அனுமதித்த நிலக்கடலை விவசாயிகளுக்கு வழங்க "தயக்கம்'

பதிவு செய்த நாள் : மே 22,2012,03:36 IST

கருத்தை பதிவு செய்ய

கம்பம்:கம்பம் பள்ளத்தாக்கில் அரசால் அனுமதிக்கப்பட்ட நிலக்கடலையை விவசாயிகளுக்கு வழங்க அதிகாரிகள் மவுனம் காத்து வருகின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் சித்திரை பட்டத்தில் மானாவாரி காடுகளில் நிலக்கடலை சாகுபடி செய்வது வழக்கமாகும். கூடலூர் முதல் கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி,கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் ஆகிய கிராமங்களில் மலையடிவாரங்களில் உள்ள மானாவாரி காடுகளில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும். கோடைமழையை பயன்படுத்தி இந்த சாகுபடி மேற்கொள்ளப்படும். கடந்த 10 ஆண்டுகளாக நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைந்துள்ளது.தற்போது சாகுபடி செய்வதற்கென நிலக்கடலை விதை, கம்பம் விவசாய அலுவலகத்திற்கு அரசால் வழங்கப்பட்டது. கிலோ ஒன்றுக்கு ரூ. 59 என்றும், 50 சதவீதம் மானியம் என்றும், ஒரு கிலோ ரூ. 28 க்கு விவசாயிகளுக்கு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ. 45 க்கு விற்கப்படுகிறது.இந்நிலையில் கம்பம் விவசாய அலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிலக்கடலை விதை 4 ஆயிரத்து 500 கிலோ விவசாயிகளுக்கு விற்காமல் இருப்பு வைத்துள்ளனர். சீசன் முடிவதற்குள் நிலக்கடலை யை வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும்.

## விதை சேமிப்பு கிடங்கு திறப்பு

பதிவு செய்த நாள் : மே 21,2012,23:24 IST

கருத்தை பதிவு செய்ய

வெம்பக்கோட்டை: வெம்பக்கோட்டையில் ரூ. 20 லட்சம் மதிப்பிலான விதை சேமிப்பு கிடங்கு திறப்பு விழா,ரூ.21 லட்சம் மதிப்பிலான சுயஉதவிக்குழு கட்டட திறப்பு விழா மற்றும் குண்டாயிருப்பு ஊராட்சியில் ஸ்மார்ட் கார்டு வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் பாலாஜி தலைமை வகித்தார். சாத்தூர் எம்.எல்.ஏ., உதயகுமார் முன்னிலை வகித்தார்.அமைச்சர் ராஜேந்திரபாலாஜி புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். ராஜ் டி.ஆர்.ஓ., மாவட்ட ஊராட்சி

துணை தலைவர் சுப்ரமணியன், வெம்பக்கோட்டை ஒன்றிய தலைவர் ரேவதி, துணை த்தலைவர் மணிகண்டன், சிவகாசி தாசில்தார் ராமச்சந்திரன்,குகன்பாறை ஊராட்சி தலைவர் ராஜூ, மாவட்ட கவுன்சிலர் சுப்புராம், சாத்தூர் தொகுதி செயலாளர் சேதுராமன் கலந்து கொண்டனர்.

## அறுவடையாகும் சாறுக்கரும்பு நீர்ச்சத்து, தித்திப்பு இருப்பதால் மவுசு

பதிவு செய்த நாள் : மே 21,2012,23:19 IST

கருத்தை பதிவு செய்ய

வெம்பக்கோட்டை: வெம்பக்கோட்டை சுற்று பகுதியில் சாறுக்கரும்பு அறுவடை நடந்து வருகிறது. நீர்ச்சத்து,தித்திப்பு இருப்பதால் இதற்கு மவுசு ஏற்பட்டுள்ளது.

அதிக விலை போவதால் விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

வெம்பக்கோட்டை வெற்றிலையூரணி, தாயில்பட்டி,கீழத்தாயில்பட்டி, சல்வார்பட்டி பகுதிகளில் ஆலைக்கரும்பு மற்றும் சாறுக்கரும்பு அதிக அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகள், மண்புழு, இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி ,சொட்டுநீர் பாசன முறையில் கரும்பு சாகுபடி செய்கின்றனர்.

இதனால் இங்கு விளையும் கரும்பில் அதிக நீர்ச்சத்து,தித்திப்பு இருப்பதால் கரும்புகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

சுற்று நகரங்களில் இருந்துவரும் கரும்புச்சாறு வியாபாரிகள், அதிக அளவில் வாங்கி செல்கின்றனர்.

கடந்த 10 மாதங்களுக்கு முன்பு நடவு செய்யப்பட்ட சாறுக்கரும்புகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

சாறுக்கரும்புகளுக்கு டன் ரூ.2100 முதல் 2300 வரை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வெற்றிலையூரணி கரும்பு விவசாயி ராமசாமி ,""கரும்பு விவசாயத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம்.

இதனால் கரும்பு விளைச்சல் மற்றும் தரம் நன்றாக உள்ளது.சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்துவதால், கோடை காலத்திலும் நல்ல விளைச்சல் பெற முடிகிறது.

இங்கு விளையும் கரும்புகள் சுவையாக இருப்பதால் மாநிலம் முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளது.

இதனால் ஆண்டு முழுவதும் கரும்பு விவசாயம் செய்கிறோம்,"என்றார்.

---

தினகரன்

## விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-05-21 12:05:20

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் இனியன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோடை கால பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், முளைப்பு திறன் அறிந்து பயிர் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முளைப்பு திறன் குறைவாக உள்ள விதைகளை சாகுபடி செய்தால் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. எனவே, தங்களிடமுள்ள விதை மாதிரிகளை பரிசோதனை செய்து, அதன் பின்னர் சாகுபடி செய்ய வேண்டும்.
மேலும், விவரங்களுக்கு விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியை அணுகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## உழவர் சந்தைகளில் வைகாசி அமாவாசையையொட்டி 208 டன் காய்கறி விற்பனை

பதிவு செய்த நேரம்:2012-05-21 10:59:59

சேலம்: வைகாசி அமாவாசையையொட்டி நேற்று சேலம் மாவட்டத்தில் உள்ள உழவர்சந்தைகளில் 208 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனையானது.
சேலம் மாநகரத்தில் அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி, அம்மாப்பேட்டை, சூரமங்கலம் என நான்கு உழவர்சந்தைகளும், மாவட்டத்தில் ஆத்தூர், தம்மம்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை, ஜலகண்டாபுரம் என 11 உழவர்சந்தைகள் உள்ளன.
நேற்று வைகாசி அமாவாசையையொட்டி உழவர்சந்தைகளில் காய்கறிகளின் விற்பனை அமோகமாக இருந்தது. குறிப்பாக அகத்திக்கீரை, வாழைக்காய், வாழைத்தண்டு, தேங்காய், வாழைப்பழம், அவரைக்காய், எலுமிச்சம்பழம், பூசணிக்காய் அதிகளவில் விற்பனையானது.
11 உழவர் சந்தைகளில் 1179 விவசாயிகள், 2 லட்சத்து 8 ஆயிரத்து 800 கிலோ காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். ரூ 35 லட்சத்து 66 ஆயிரத்துக்கு விற்பனையானது. 45 ஆயிரம் நுகர்வோர்கள் காய்கறிகளை வாங்கிச் சென்றனர்.
அதிகபட்சமாக சூரமங்கலத்தில் 246 விவசாயிகள், 44 டன் கிலோ காய்கறிகள் ரூ7 லட்சத்து 35

ஆயிரத்துக்கு விற்பனையானது. 8 ஆயிரத்து 700 நுகர்வோர்கள் வந்தனர். ஆத்தூரில் 176 விவசாயிகள், 37 டன் காய்கறிகள் ரூ6 லட்சத்து 26 ஆயிரத்துக்கு விற்பனையானது. 7 ஆயிரத்து 400 நுகர்வோர்கள் வந்தனர்.

நேற்று அமாவாசையையொட்டி மார்க்கெட்டில் வழக்கத்துக்கு மாறாக கீரை விற்பனை அமோகமாக இருந்தது. இதில் அகத்திக்கீரை அதிகளவில் விற்பனையானது. ஒரு கட்டு அகத்திக்கீரை ரூ5 எனவும், மணத்தக்காளி ரூ4, சிறுக்கீரை ரூ3, அரைக்கீரை ரூ2, மொளைக்கீரை, பாலக்கீரை ரூ3 எனவும் விற்பனை செய்யப்பட்டது. உழவர் சந்தைகளில் நேற்று மட்டும் 208 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன.

---